**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre Homebush Inc.**
PO Box 4032, Homebush, NSW 2140.
www.tsch.org.au
homebushtsch@gmail.com

## பேச்சுப் போட்டி 2025 ஆண்டு 5

அனைவருக்கும் வணக்கம்

### தமிழ்க் குடும்பம்

ஒரு சமூகத்தின் முக்கியமான அங்கம் குடும்பம் ஆகும். நாம் வாழும் குடும்பங்களை நினைத்துப் பார்ப்போம். எமது குடும்பத்தில் இருப்பவர்கள் யார்? யார்? அப்பா, அம்மா, பிள்ளைகள் ஆகியோர் பொதுவாக ஒரு தனிக் குடும்பத்தில் அடங்குவர். கூட்டுக் குடும்பங்களில் தாத்தா, பாட்டி, பெரியப்பா, சித்தப்பா மாமா, மாமி ஆகியோரும் இருப்பர்.

நாம் எமது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் உறவு முறை சொல்லியே அழைப்பது வழக்கம். இப்போது நாம் உறவுமுறைப் பெயரால் அழைப்பதைத் தவிர்த்து வருகிறோம். எங்கள் உறவு முறைப் பெயர்களைக் கூறி அழைக்க நாம் மறக்கக் கூடாது.

தமிழ்க் குடும்பங்களுக்குச் சில தனித்துவமானதும், விசேடமானதுமான பண்புகள் உள்ளன. பெற்றோரை மதித்தல், பெற்றோர் சொற் கேட்டு நடத்தல், பெரியோரைக் கனம் பண்ணுதல், விருந்தினரைப் உபசரித்தல் எனப் பலவாகும்.

கால ஓட்டத்தில் சில பண்புகள் மாறினாலும் தமிழ்க் குடும்பங்களின் அடிப்படைப் பண்புகள் இன்னமும் மாறாமல் இருப்பதை எண்ணி நாம் பெருமை கொள்வோம்.

நன்றி

வணக்கம்